**சி.பி.எண்.27/2024** **06.03.2026**

**எ.ம.த.சாட்சி 1 சமீல்அகமத் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

ஐ.டி வழக்கை ரத்து செய்ததற்காக ஆவணங்கள் எதையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை. வருகை பதிவேடு மற்றும் சம்பள பதிவேடு ஆவணங்களை நிர்வாகமே இயங்காததால் நான் தாக்கல் செய்யவில்லை. ஐ.டி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதற்கு நாங்கள் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. இ.எஸ்.ஐ மற்றும் இ.பி.எப் பதிவேடுகள் சமரப்பிக்கப்படவில்லை என்றால் நிர்வாகமே இயங்காததால் நாங்கள் சமர்ப்பிக்கவில்லை. ஐ.டி.87/2016ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வதற்காக இன்றைய தேதிவரை நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. மேலும் ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்வற்காக நாங்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளதால் மனுதாரர் சரியான நிறுவனத்தின் பேரில் தான் மனு தாக்கல் செய்தார் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் நிறுவனத்தின் பெயரை மறுப்பது இந்நீதிமன்றம் பிறப்பித்த தீர்வத்தை மறுப்பதற்காக தான் என்றால் சரியல்ல. மனுதாரர் வேலை செய்ததை மறுப்பதற்கு எங்களிடம் ஆதாரம் எதுவும் இல்லை என்றால் அது போன்ற ஒரு நிறுவனமே செயல்படவில்லை. கம்பெனியின் பெயர் மட்டும் மாற்றப்பட்டது உரிமையாளர் ஒரே நபர் தான் என்றால் சரியல்ல. தொழிலாளிக்கு பின்சம்பளம் தருவதை தவிர்க்க தான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.03.07 13:11:17 +0530